தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.45/மா/2022**
**நாள். 16.05.2022**

திரு. B. விஜயகுமார்,
சென்னை – 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–04,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண்.14/15-ல் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவரின் 16.04.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.04.2022 அன்று பெறப்பட்டு 45/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண்.14/15-ல் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 16.04.2022 நாளிட்ட தனது மனுவில், கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" சென்னை, கொடுங்கையூர், முத்தமிழ் நகர், மண்டலம் –04, பகுதி–09, வார்டு –35, கிழக்கு அவென்யூ, 1–வது மெயின்ரோடு, கதவு எண்.69 என்ற விலாசத்தில் ஆரோக்கிய அன்னை ஆலயம் (our lady of health church) என்ற கிருஸ்துவ தேவாலய கட்டிடம் எந்த

ஒரு கட்டிட அனுமதியும் பெறாமல் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலை புறம்போக்கு நிலத்தை அப்பட்டமாக ஆக்கிரமிப்பு செய்து விதி மீறி கட்டிடம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பல முறை பொதுமக்கள் சார்பில் புகார் அளித்தாலும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அவற்றை முறைப்படி விசாரணை செய்வதில்லை. எனவே இந்த புகார் மனுவினை விரைவில் விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற தேவாலய கட்டிடம் மற்றும் அதன் உரிமையாளர்கள் மீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட சட்டம், 1971, சட்டப்பிரிவு 56, 57 மற்றும் 85ன்படி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், மேற்கண்ட நிலத்தினை மீட்டு சென்னை மாநகராட்சி வசம் கொண்டு வரவேண்டுமென்றும், தங்களை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு மண்டல அலுவலர், மண்டலம் 04 அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 28.04.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

3) மனுதாரர் திரு. B. விஜயகுமார் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம 04 ஆகியோர் 11.05.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 28.04.2022 நாளிட்ட கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

4) மனுதாரர் 11.05.2022 அன்றைய நேரடி விசாரயையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" சென்னை கொடுங்கையூர் முத்தமிழ் நகர் கிழக்கு அவென்யூ 1வது மெயின் தெருவில் ஆரோக்கிய அன்னை ஆலயம் என்ற கிருத்துவ தேவாலய கட்டடம் மாநகராட்சி அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளது. மேலும், இக்கட்டடம் மாநகராட்சி இடத்தையும், சாலையையும் ஆக்கிரமிப்பு செய்தும் கட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாநகராட்சியில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சி அலுவலர்களால் முறைப்படி எடுக்கப்படவில்லை. எனவே, இது தொடர்பாக மாநகராட்சி அலுவலர்களால் உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) பெருநகர சென்னை மாநகராட்சியை, மண்டலம் 04–ஐச் சேர்ந்த இளநிலைப்பொறியாளர் 11.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" சென்னை கொடுங்கையூர் முத்தமிழ் நகர் கிழக்கு அவென்யூ 1வது மெயின் தெருவில் அமைந்துள்ள ஆரோக்கிய அன்னை ஆலயம் எனும் கிருத்துவ தேவாலய கட்டடம் மாநகராட்சி இடத்தையோ அல்லது சாலையையோ ஆக்கிரமிப்பு செய்து கட்டப்படவில்லை எனவும், தேவாலயத்தை சேர்ந்தவர்கள் வீட்டு வசதி வாரிய இடத்தை தனியர்களிடம் தனித்தனியாக கிரையமாக பெற்று, சிறிது சிறிதாக மேற்கண்ட தேவாலயத்தை கட்டியுள்ளனர் எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான விற்பனை பத்திரங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும், மேற்கண்ட தேவாலயம் மாநகராட்சியில் வரைபட அனுமதி ஏதும் பெறாமல்

கட்டப்பட்டுள்ளது என்றும், அதற்கான நோட்டீஸ் விரைவில் வழங்கப்படும் எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என கூறியுள்ளார்.

**6)** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் **04**–ஐச் சேர்ந்த இளநிலை பொறியாளரின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

- மனுதாரர் தெரிவித்துள்ளபடி மேற்படி ஆரோக்கிய அன்னை ஆலயம் எனும் கிருத்துவ தேவாலய கட்டடம் மாநகராட்சி இடத்தையோ அல்லது சாலையையோ ஆக்கிரமிப்பு செய்து கட்டப்படவில்லை எனவும், தேவாலயத்தை சேர்ந்தவர்கள் வீட்டு வசதி வாரிய இடத்தை தனியர்களிடம் தனித்தனியாக கிரையமாக பெற்று சிறிது சிறிதாக மேற்கண்ட தேவாலயத்தை கட்டியுள்ளனர் என்பது பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் **04**–ஐச்சேர்ந்த இளநிலைபொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

- மேற்படி தேவாலய கட்டிடம் மாநகராட்சியின் வரைபட அனுமதி ஏதும் பெறாமல் கட்டப்பட்டுள்ளது என்பதையும் அதற்கான நோட்டீஸ் விரைவில் வழங்கப்படும் எனவும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–**04**ஐச் சேர்ந்த இளநிலைபொறியாளர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் உரிய நேரத்தில் விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்காமல் விதி மீறி அனுமதியின்றி கட்டடம் கட்டுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் –**04**ஐச் சேர்ந்த அலுவலர்கள் கண்டும் காணாமல் இருந்ததை அறியமுடிகிறது. இதற்கு பொறுப்பான மற்றும் இம்மனு தொடர்பான அறிக்கையை அனுப்ப கோரி **28.04.2022**–ல் இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தியும், உரிய அறிக்கையை அனுப்பாமல் மெத்தனமாக செயல்பட்ட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் அனுமதியற்ற கட்டடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

Appropriate disciplinary action against the delinquent officials concerned should be taken forthwith by the Greater Chennai Corporation Commissioner for having flouted the standard rules in operation to control such rule violations and kept quiet so long in a case of construction without obtaining planning permission. The Assistant Commissioner of the zone deserves to be pulled up in strong terms for leadership failure, lack of supervision in a complaint of this nature and dereliction of duties. Disciplinary action has to be taken to its logical end with substantial punishment in order to instill a moral fear in the minds of the field level

officials so that such violations do not recur and mar the image of the Local Body in the eyes of the general public.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.B.விஜயகுமார்,
எண்.14/15, சால்ட் குறுக்குத்தெரு,
துர்காதேவி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் - 4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

16/5/22

செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032